Australian Government
Department of Home Affairs

# சர்வதேச மாணவர்கள்

இந்தத் தகவல், மாணவர் (துணைப்பிரிவு 500) அல்லது தற்காலிகப் பட்டதாரி (துணைப்பிரிவு 485) விசா வைத்திருப்பவர்களுக்கானது.

## ஒரு புதிய மாணவர் விசாவுக்கு விண்ணப்பித்தல்

கோவிட்-19 காரணமாக, சில விசா செயலாக்க நேரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட அதிக நேரம் ஆகலாம்.

முழுமையான விண்ணப்பம் ஒன்று சமர்ப்பிப்பது அவ்விண்ணப்பம் துரிதமாக பரிசீலிக்கப்படுவதை இயலுமாக்கும். உள்நாட்டு விவகார திணைக்களத்துக்கு முழுமைப்படுத்தப்பட்ட மாணவர் விசா விண்ணப்பங்களை வழங்குமாறு நாம் மாணவர்களை ஊக்குவிக்கின்றோம். தேவைப்பாடுகளை அறிந்து கொள்வதற்கு, ஆவணச் சரிபார்க்கைப் பட்டியல் கருவியை மாணவர்களால் பயன்படுத்த முடியும்.

மேலதிகத் தகவலுக்கு, சர்வதேச விசா செயலாக்க நேரம் என்பதைப் பார்வையிடவும்.

## மாணவர் விசா கட்டணத் தள்ளுபடி

நீங்கள் பெப்ரவரி 1, 2020 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஒரு மாணவர் விசா வைத்திருந்து கோவிட்-19 தாக்கங்கள் காரணமாக உண்மையான விசா செல்லுபடிக் காலத்திற்குள் உங்கள் படிப்பை உங்களால் முடிக்க முடியாமல் போயிருந்தால், ஒரு கூடுதல் மாணவர் விசா விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க உங்களுக்கு அனுமதிக்கும் வகையில் விசா விண்ணப்பக் கட்டணத்தை நாங்கள் தள்ளுபடி செய்வோம். நீங்கள் பின்வரும் தகுதியைப் பெற்றிருந்தாலும் இதில் உள்ளடங்கும்:

- பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாக உங்களால் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முடியாததால் உங்கள் படிப்பு தாமதம் ஆகியிருந்தால்

- பகுதிநேரப் படிப்புச் சுமையைக் குறைப்பதற்கு நீங்கள் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தால்
- உங்கள் வேலை தொடர்பான பயிற்சி அல்லது வேலைவாய்ப்புகளை உங்களால் முடிக்க முடியாமல் போயிருந்தால்.

இந்த நடவடிக்கை, சாதாரண காரணங்களுக்காக (நீங்கள் ஒரு கோர்ஸ் அல்லது படிப்புப் பிரிவில் தேர்ச்சி பெறாதது, தனிப்பட்ட காரணங்களுக்காக தாமதம் ஆகியிருப்பது அல்லது உங்கள் படிப்புச் சுமையை நீங்கள் தாமாக முன்வந்து குறைத்திருப்பது போன்றவை இதில் அடங்கும்) ஒரு புதிய மாணவர் விசாவிற்கு விண்ணப்பிக்கின்ற மாணவர்களுக்குப் பொருந்தாது.

உங்கள் விண்ணப்பத்திற்கான கட்டணத் தள்ளுபடி பரிசீலிக்கப்பட வேண்டுமெனில் நீங்கள் ஒரு மாணவர் விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் பூர்த்தி செய்த படிவம் 1545 கோவிட்-19 தாக்கத்திற்கு உள்ளான மாணவர் (228 KB PDF) என்ற சான்றிதழை உங்கள் கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

நீங்கள் அவுஸ்திரேலியாவில் கட்டணத் தள்ளுபடிக்கு விண்ணப்பிப்பவராக இருந்தால், முதலில் கட்டணத் தள்ளுபடி சரிபார்க்கப்பட வேண்டும் என்பதால் இணைப்பு விசா தானாகவே வழங்கப்பட மாட்டாது.

இந்தத் தள்ளுபடி, விசா விண்ணப்பக் கட்டணத்திற்கு (VAC) மட்டுமே பொருந்தும்.

மேலும், தற்போது அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்து 19 ஜனவரி 2022 மற்றும் 19 மார்ச் 2022 ஆகிய திகதிகளுக்குள் வருகைத் தருகின்ற, மாணவர் விசா வைத்திருப்போர் VAC-ஐ மீளப்பெற்றுக்கொள்ள தகுதியுடைவர்களாக இருக்கலாம். VAC பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது பற்றிய மேலதிகத் தகவலுக்கு, பணத்தைத் திரும்பப் பெறுதல் என்பதைப் பார்வையிடவும்.

## படிவம் 1545 கோவிட்-19

நீங்கள் பெப்ரவரி 1, 2020 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஒரு மாணவர் விசா வைத்திருந்தீர்கள் என்றும், கோவிட்-19 காரணமாக உங்கள் உண்மையான விசா செல்லுபடிக் காலத்தில் உங்களால் படிப்பை முடிக்க முடியவில்லை என்றும் கல்வி நிறுவனங்களுக்கு மனநிறைவு ஏற்பட வேண்டும்.

நீங்கள் பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் கோவிட்-19 தொடர்பான தாக்கங்களுக்கான கூடுதல் ஆதாரத்தையும் நீங்கள் சமர்ப்பிக்கலாம்.

### மேலதிகத் தகவல்களுக்கான நெகிழ்வுத்தன்மையுள்ள காலக்கெடுக்கள் - ஆங்கிலத் தேர்வுகள், பயோமெட்ரிக்ஸ் மற்றும் உடல்நலம்

நீங்கள் கோவிட்-19 காரணமாக தேர்வு எழுத முடியாமல் இருந்தால் உங்கள் ஆங்கில மொழித் தேர்வு முடிவுகளை வழங்க நாங்கள் கூடுதல் அவகாசம் அனுமதிப்போம். சேவைகளுக்கான அணுகலில் கோவிட்-19 இடையூறு ஏற்படுத்தியிருந்தால், பயோமெட்ரிக்ஸ் சேகரிப்பு மற்றும் உடல்நலப் பரிசோதனைகளுக்கும் கூடுதல் அவகாசம் அளிக்கப்படும்.

இவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சேவைகளுக்கு எதிர்காலத்தில் 28 நாட்களுக்கு மேல் ஒரு நியமனச் சந்திப்புக்கு முன்பதிவு செய்திருந்தால், நியமனச் சந்திப்பு உறுதிப்படுத்தலை ImmiAccount -ல் நீங்கள் இணைக்கலாம்.

திணைக்களத்துக்குத் தகவல் தெரிவிக்க தயவுசெய்து ImmiAccount வாயிலாக கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கவும், உங்களுக்குத் தேவைப்பட்டால் கூடுதல் அவகாசம் வேண்டும் என்பதையும் அதில் குறிப்பிடவும்.

## தற்போது விசா வைத்திருப்பவர்கள்

### கோவிட்-19 காரணமாக ஆரம்பமாகும் திகதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள நெகிழ்வுத்தன்மை மிக்க ஏற்பாடுகள்

கோவிட் - 19 கட்டுப்பாடுகள் காரணமாக சில மாணவர்களால் தமது பாடநெறிகளை உரிய நேரத்தில் தொடங்க இயலாமல் போகலாம் என்பதை திணைக்களம் புரிந்து கொள்கின்றது. கோவிட் - 19 கட்டுப்பாடுகள் காரணமாக உங்களால் கற்கைகளை ஆரம்பிக்க முடியாது என்பதை உங்களின் கல்வி வழங்குநர் அறிந்து கொள்வதை உறுதி செய்யுங்கள். உங்களின் விசா நிபந்தனைகளை நீங்கள் மீறவில்லை என்பதை உறுதி செய்ய முடியுமான விருப்பத்தெரிவுகளும் காணப்படுகின்றன. உங்களின் சூழ்நிலைகளுக்கு பொருத்தமான வகையில் காணப்படும் விருப்பத்தெரிவுகள் எவை என உங்களின் கல்வி வழங்குநரால் கூற முடியும்.

உங்களிடம் ஒரு மாணவர் விசா உள்ள நிலையில், உங்களால் கோவிட் - 19 கட்டுப்பாடுகள் காரணமாக பயணிக்க முடியாது எனில் உங்களின் கல்வி வழங்குநரை தொடர்பு கொள்ளவும். அனைத்து நேரங்களிலும் நீங்கள் அனுமதிக்கப்பட்ட பாடநெறி ஒன்றுக்கு சேர்க்கப்பட்டுள்ளதை உறுதி செய்யுங்கள்.

உங்களின் பின்வரும் நிலைகளில் நாம் உங்களின் விசாவை இரத்து செய்ய நேரிடலாம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்:

- உரிய நேரத்தில் கற்கைகளை ஆரம்பிக்கத் தவறுதல், அல்லது
- தற்போதைய அல்லது செயற்படு நிலையில் உள்ள உள்வாங்கப்பட்டமைக்கான உறுதியை (CoE) கொண்டிராமை.

இது நடக்காவிட்டால் உங்களின் கல்வி வழங்குநரால் உங்களுக்கு இயலாது.

உங்களிடம் தற்போதைய அல்லது செயற்படு நிலையில் உள்ள CoE இல்லாத நிலையில் நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்தால், உங்களின் விசா நிலையை VEVO இல் சரிபார்த்துக் கொள்ளுங்கள். எந்த ஒரு பயண திட்டங்களையும் மேற்கொள்ளும் முன்னர் உங்களின் விசா நிலை மாற்றமடையவில்லை என்பதை உறுதி செய்ய இதனை செய்யுங்கள்.

மேலதிகத் தகவலுக்கு, உங்கள் படிப்பு நிலைமை மாறிவிட்டது என்பதைப் பார்வையிடவும்.

## மாணவர் விசா நிபந்தனைகள்

மாணவர் விசா நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதை கோவிட்-19 கட்டுப்பாடுகள் தடங்கல் ஏற்படுத்தியுள்ள இடங்களில் நாங்கள் நெகிழ்வுத்தன்மையுள்ள அணுகுமுறையைப் பின்பற்றி வருகிறோம். நீங்கள் பின்வரும் நிலைமைகளில் இருந்தால் உங்கள் விசா நிபந்தனைகளை மீறியவர் ஆக மாட்டீர்கள்:

- அனுமதியுடன் கோர்ஸ் ஒத்திவைக்கப்பட்டிருந்தால்
- ஆன்லைனில் படித்துக்கொண்டிருந்தால்.

தற்போதைய தொழிலாளர் பற்றாக்குறைகளைக் கருத்திற்கொண்டு, பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் மாணவர் விசாவைக் கொண்டுள்ளோர் பணிபுரியும் மணிநேரக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் தற்காலிகமாக தளர்த்துகின்றது. மேலதிகத் தகவலுக்கு, மாணவர்கள் மற்றும் விடுமுறையில் பணிபுரிபவர்களுக்கான (Working Holiday Makers) விசா பணி நிலைமைகளில் தற்காலிக மாற்றங்கள் என்பதைப் பார்வையிடவும். இது தமது பாட நெறி ஆரம்பமாவதற்கு முன்னர் வேலை ஒன்றை பெற்று அதனை ஆரம்பிக்க விரும்பும் தற்போதைய மற்றும் வருகை தரும் புதிய மாணவர்களுக்கு உரிய தற்காலிக நடவடிக்கையாக அமைவதுடன் இது ஏப்ரல் 2022 இல் மீளாய்வு செய்யப்படும். இதில் இரண்டாம் நிலை விண்ணப்பதாரிகளும் உள்ளடங்குகின்றனர்.

மேலதிகத் தகவலுக்கு, மாணவர் விசா வைத்திருப்பவர்களுக்கு வேலை நேரங்களில் தற்காலிகத் தளர்வுகள் என்பதைப் பார்க்கவும்.

## மாணவர்களுக்கான விசா விண்ணப்பக் கட்டண மீளளிப்பு

கோவிட்- 19 இனால் ஏற்பட்ட தற்போதைய தொழிலாளர் பற்றாக்குறையை முடிந்த அளவு விரைவாக தீர்ப்பதற்கு உதவும் வகையில் மாணவர் விசாக்களை கொண்டுள்ளார் முடிந்தளவு விரைவாக திரும்புவதற்கான ஊக்குவிப்பு ஒன்றையும் அரசாங்கம் வழங்குகின்றது.

தற்போது அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்து 19 ஜனவரி 2022 மற்றும் 19 மார்ச் 2022 ஆகிய திகதிகளுக்குள் வருகைத் தருகிற, மாணவர் விசா வைத்திருப்போர் விசா விண்ணப்பக் கட்டணங்களை (VAC) மீளப்பெற்றுக்கொள்ள தகுதியுடைவராக இருக்கலாம். அவ்வாறான கட்டண மீளளிப்புக்கு நீங்கள் 31 டிசம்பர் 2022 வரை விண்ணப்பிக்க இயலும். VAC பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது பற்றிய மேலதிகத் தகவலுக்கு, பணத்தைத் திரும்பப் பெறுதல் என்பதைப் பார்வையிடவும்.

## எங்களுக்கு எப்போது தகவல் தெரிவிக்க வேண்டும்

நீங்கள் தாய்நாட்டுக்குத் திரும்பினால் அல்லது உங்கள் படிப்புச் சூழ்நிலை மாறினால் நீங்கள் எங்களிடம் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் மற்றொரு விசா விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் வரை, அல்லது உங்கள் விசா காலாவதியாகும் வரை உங்களுடைய தற்போதைய விசா செல்லத்தக்கதாகும். நீங்கள் தாய்நாட்டிற்குத் திரும்பினால் அல்லது உங்கள் படிப்பு தள்ளிவைக்கப்பட்டால் உங்கள் விசா நிலைமை மாறாது.

கல்வி நிறுவனங்கள் ஒரு புதிய சேர்க்கை உறுதிப்படுத்தல் (CoE) வழங்கி மாணவர்களை ஆன்லைனில் படிக்குமாறு சேர்த்துக்கொள்ளலாம். நீங்கள் ஒரு மாணவர் விசா வைத்திருந்தால், உங்கள் கல்வி நிறுவனம் உங்கள் புதிய CoE-ஐ எங்களிடம் அளிக்கும்.

உங்கள் மாணவர் விசா விண்ணப்பம் இன்னும் செயலாக்கப்படாமல் இருந்தால், ImmiAccount மூலம் உங்கள் விண்ணப்பத்துடன் உங்கள் புதிய CoE-ஐ நீங்கள் இணைக்கலாம்.

## மேலதிகத் தகவல்கள்

சர்வதேச மாணவர்களுக்கான தகவல்கள் பின்வருபவை உள்ளிட்ட பல்வேறு அரசாங்க முகமைகளில் கிடைக்கிறது:

- அவுஸ்திரேலிய அரசாங்க கோவிட்-19 என்ற இணைப்பில் அண்மைய செய்திகள், புதுப்பிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அறிவுரைகளைப் பெறலாம்.

- கல்வி, திறன்கள் மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் அத்துடன் மின்னஞ்சல் international.students@dese.gov.au
- சுகாதாரத் திணைக்களம் வெளிநாட்டு மாணவர்களுக்கான சுகாதார காப்புறுதிக்காக
- சர்வதேச மாணவர் குறைகேள் அதிகாரி கோவிட்-19 தொடர்பான முறைப்பாடுகளுக்காக
- அவுஸ்திரேலியாவில் கல்வி ஆதரவுச் சேவைகள் பற்றிய தகவல்களுக்காக

## நிதி உதவி

நீங்கள் அவுஸ்திரேலியாவில் படித்து வேலை செய்கிறீர்கள் என்றால், பின்வரும் சூழ்நிலைகளில் நீங்கள் நிதி உதவியைப் பெறலாம்:

- கோவிட்-19 (தொற்றுநோய் விடுப்பு பேரிடர் பண வழங்கீடு) உள்ள ஒருவரைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லது கவனித்துக் கொள்ள வேண்டும் அல்லது
- மாநில பொது சுகாதார ஆணையால் மிகவும் பாதிக்கப்பட்டு ஏழு நாட்களுக்கும் மேலாக பூட்டப்பட்ட நிலையில் இருந்தால் (COVID-19 பேரிடர் பண வழங்கீடு).

நிதி ஆதரவு கொடுப்பனவுகள் மற்றும் தகுதிக்கான அளவுகோல்கள் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, சென்டர்லிங் பண வழங்கீடுகள் மற்றும் சேவைகள் என்பதைப் பார்வையிடவும்.

## மாணவர் வருகைத் திட்டங்கள்

சர்வதேச பயணத் தேவைகளுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டது என்ற அவுஸ்திரேலியாவின் வரையறையை நீங்கள் பூர்த்தி செய்யவில்லை என்றால், சர்வதேச மாணவர் வருகைத் திட்டத்தின் கீழ் நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குப் பயணிக்க முடியும். மேலதிகத் தகவலுக்கு, மாணவர் விசாக்கள் என்பதைப் பார்வையிடவும்.

## தற்காலிக பட்டதாரி விசா மாற்றீடுகள் மற்றும் நீட்டிப்புகள்

நீங்கள் தற்காலிக பட்டதாரி விசாவை வைத்திருந்தால், மாற்று விசா அல்லது விசா நீட்டிப்புக்கு நீங்கள் தகுதி பெறலாம். மேலதிகத் தகவலுக்கு, தற்காலிக பட்டதாரி விசா என்பதைப் பார்வையிடவும்.